செ.வெ.எண்:16 நாள்:11.04.2021

# கிருஷ்ணகிரி மாவட்டம்
# கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, 2,45,918 நபர்களுக்கு (RTPCR) கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்

---

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சியில் இன்று (11.04.2021) கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, தயார் நிலையில் உள்ள ஓசூர் பட்டு வளர்ச்சித்துறை கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் அரசு மருத்துவமனை, ஓசூர் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் 25.3.2020 முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது. தற்போதுள்ள நோய் பரவல் நிலை, வெளிநாடுகளில் உருமாறிய கொரோனா வைரஸின் தாக்கம், அண்டை மற்றும் இதர வெளிமாநிலங்களில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் பொது ஊரடங்கு உத்தரவு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு தளர்வுகளுடனும் மேலும் சில கட்டுப்பாடுகளுடன், 30.04.2021 நள்ளிரவு 12 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், உலக சுகாதார நிறுவனம் இதனை உலகளாவிய நோய் தொற்றாக அறிவித்த சூழ்நிலையில் நாடு முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டது. இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்வு மற்றும் பொருளாதார சூழ்நிலை பாதிக்கப்பட்டது. இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட கூடாது என்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 அரசு கொரோனா தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் 3 தனியார் கொரோனா தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மூலம் நாளதுவரை 2,45,918 கெரோனா தொற்று தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 96,340 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 974 படுக்கை வசதிகளுடன் கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் தயார் நிலையில் உள்ளது. நாளதுவரை 9022 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு, 8424 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்பொழுது 479 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடு முழுவதும் கொரோனா வைரஸின் பரவல் தற்பொழுது அதிகரித்து வரும் சூழ்நிலையில் பொதுமக்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும். பொதுமக்கள் அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி, வணிக வளாகங்கள், அங்காடிகள், காய்கறி சந்தை உள்ளிட்ட பொது இடங்களுக்கு செல்லும் பொழுது முககவசம் கட்டாயம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். அடிக்கடி சோப்பு, கிருமிநாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்ய வேண்டும்.

மேலும், அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாமல் இயங்கும் வணிக வளாகங்கள், அங்காடிகள் உள்ளிட்ட நிறுவனங்கள் மீது அபராதம் விதிக்கப்படும். வணிக நிறுவனங்கள் மற்றும் அங்காடிகளுக்கு வரும் ஒவ்வொரு நபருக்கும் உடல் வெப்பநிலை அறியும் தெர்மல் ஸ்கேனர் கொண்டு பரிசோதித்த பின்பு அனுமதிக்க வேண்டும்.

மேலும், பொது இடங்களுக்கு முக கவசம் அணியாமல் வரும் தனி நபருக்கு அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து முக கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை கடைபிடிக்காமலும், அரசின் விதிமுறைகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் ஓசூர் மாநகராட்சியில், 80 படுக்கை வசதிகள் கொண்ட பட்டு வளர்ச்சித்துறை கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் 120 படுக்கை வசதிகள் கொண்ட அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி ஆணையர் திரு.செந்தில்முருகன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பரமசிவன் மற்றும் துறை சார்ந்த மருத்துவர்கள், அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.